Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 15 | விலை – 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :30 சித்திரை 08 ஆம் நாள் திங்கட்கிழமை 27 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## வீதியில் சென்றவர் வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி நாவலர் வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவர் ஒருவர் வீதியில் சரிந்து வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.25 மணியளவில் இடம்பெற்றது. ஓட்டுமடத்தைச் சேர்ந்த தம்பு வாமதேவன் (வயது–68) என்பவரே உயிரிழந்தவராவார்.

உறவினர் வீடு ஒன்றுக்குச் சென்று திரும்பிய நிலையிலேயே முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தையடுத்து 1990 அம்புலன்ஸ் வண்டிக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு அம்புலன்ஸ் வண்டி வந்த போதும் முதியவர் உயிரி 02

## முப்படையினரின் விடுமுறை இரத்து!

கொழும்பு, ஏப். 27

முப்படை அதிகாரிகள் மற்றும் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் படையினரையும் தத்தமது முகாம்களுக்குத் திரும்புமாறு பணிக்கப்பட் 02

## ஓ.எல். பரீட்சை முடிவுகள் இரு நாள்களில் வெளிவரும்

கொழும்பு, ஏப். 27

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் வெளியிடுவ தற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இதனைத் தெரிவித்துள் 02



# ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொரோனா சிகிச்சை நிலையம்

*வடக்கு மாகாண சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தகவல்*


**யாழ்ப்பாணம், ஏப்ரல் 27**

**கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் மருத்துவமனைகளை அடையாளம் காணுமாறு கொழும்பு சுகாதார அமைச்சு அவசர பணிப்புரையை விடுத்துள்ளது. வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இதற்குரிய மருத்துவமனைகளை அடையாளம் காண்பதற்கான பொறுப்பு அந்தந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.** 02

## முப்படையினரும் முகாம் திரும்ப நாடு முழுவதும் இன்று ஊரடங்கு

கொழும்பு, ஏப். 27

விடுமுறையில் சென்றுள்ள முப்படை அதிகாரிகள் மற்றும் படையினர் ஆகியோரை முகாம்களுக்கு அழைப்பதை இலகுபடுத்தும் வகையில் இன்று திங்கட்கிழமை நாடு முழு 02



## வேகமெடுக்கும் கொரோனா

| | |
|---|---|
| 0 - 100 நோயாளிகள் | 57 நாள்கள் |
| 101 - 200 நோயாளிகள் | 19 நாள்கள் |
| 201 - 300 நோயாளிகள் | 08 நாள்கள் |
| 301 - 400 நோயாளிகள் | 04 நாள்கள் |
| 401 - 500 நோயாளிகள் | 02 நாள்கள் |

## கொரோனா 523 மக்கள் பேரச்சம்

கொழும்பு, ஏப். 27

உலக நாடுகளைக் கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் இலங்கையிலும் தனது தாண்டவத்தை நாளுக்கு நாள் காட்டி வருகின் 02

## கொரோனா தடுப்பு நடவடிக்கை வடக்கில் 5 பாடசாலைகளை வழங்க கோருகின்றனர் பாதுகாப்புத் தரப்பினர்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக 5 பாடசாலைகளை தமது பாவனைக்கு வழங்குமாறு பாதுகாப்புத் தரப்பினர் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் இரண்டு பாடசாலைகள், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒவ்வொரு பாடசாலைகள் வீதம் கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

விடுமுறையில் வீடு சென்று கட 02

## 'கொரோனா' சடலங்களை அகற்ற ஆயிரம் உறைகளை வழங்குங்கள்

*செஞ்சிலுவைச் சங்கத்திடம் சுகாதார அமைச்சு வேண்டுகோள்*

கொழும்பு, ஏப். 27

கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அகற்றுவதற்காக ஆயிரம் பாதுகாப்பான உறைகள் வழங்குமாறு சுகாதார அமைச்சு செஞ்சிலுவைச் சங்கத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது. சுகாதார அமைச்சின் மேலதிக செயலர் மருத்துவர் சுனில் டி அல்விஸ் கையெழுத்துடன் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் இலங்கையில் கொரோனா அச்சுறுத்தல் தீவிரமாக இல்லை என்றும், செஞ்சிலுவைச் சங்கத்தின் கோரிக்கைக்கமைய இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அவர் கூறினார். தேவைப்பட்டால் பயன்படுத்த நாட்டில் பாதுகாப் 02

## வெலிசறை கடற்படை சிப்பாயுடன் பயணித்த 71 இராணுவத்தினர் முல்லையில் தனிமைப்படுத்தலில்

*வியாழனன்று சோதனை*

முல்லைத்தீவு, ஏப். 27

அண்மையில் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்று திரும்பிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் 71 இராணுவச் சிப்பாய்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் எவருக்கும் இதுவரை கொரோனாவுக்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. எனவே யாரும் அச்சமடையத் தேவையில்லை. இவ்வாறு முல்லைத்தீவு 02

## வவுனியாவில் கடற்படை சிப்பாய்க்கு கொரோனா

வவுனியா, ஏப். 27

வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த கடற்படை சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 38 வயதான சிப்பாய்க்கே நேற்று தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி வவுனியா மகாகச்சகொடி பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் வந்திருந்தார். அவர் மற்றும் 02

## கோப்பாய் கல்வியற் கல்லூரி பாதுகாப்புத் தரப்பினரின் தனிமைப்படுத்தல் மையம்

*மக்கள் அச்சம்*

யாழ்ப்பாணம், ஏப். 27

விடுமுறையில் வீடு சென்ற முப்படையினரையும் உடனடியாக கடமைக்குத் திரும்பப் பணிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு முகாம் திரும்பும் படையினரை தனிமைப்படுத்திக் கண்காணிப்பதற்காக கோப்பாய் தேசிய கல்வியற் கல் 02

## ஒவ்வொரு...

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு கொழும்பு தொற்று நோய் மருத்துவமனை, இரணவில மருத்துவமனை, பொலநறுவை கந்தக்காடு மருத்துவமனை, கொழும்பு முல்லேரியா மருத்துவமனை ஆகியவற்றில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்தன.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் மருத்துவமனைகளை விரிவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனையடுத்து ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருத்துவமனைகளை தயார்படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் மருத்துவமனைகளை அடையாளப்படுத்தும் பொறுப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## கொரோனா...

றது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 523 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொரோனா வைரஸ் தொற்றுடன் 40 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று 63 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 460 இலிருந்து 523 ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரிப்பு மக்களைப் பேரச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்களும், அவர்களின் உறவினர்களும் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களும் அடங்குகின்றனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 396 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 120 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அத்துடன் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 273 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,5,22)

## கொரோனா சட...

பான உறைகள் இல்லை என்று சட்ட மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னர் வலியுறுத்திய பின்னர், இதுபோன்ற ஆயிரம் உறைகளை வழங்க முடியும் என்று செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது என அறியமுடிந்தது.

இருப்பினும், செஞ்சிலுவைச் சங்க நிர்வாக நடைமுறைகளின்படி எழுத்து மூலம் கோரிக்கை விடுக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது எனவும், கொரோனாவால் தகனம் செய்யப்படும் சடலங்களுக்கு மாத்திரமன்றி மீண்டும் தோண்டக்கூடிய சந்தேகம் உள்ள சடலங்களை அடக்கம் செய்யவும் இந்த உறைகள் பயன்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கடிதத்தை வெளியிட்டதற்கான காரணம் குறித்து சுகாதார அமைச்சர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் சுகாதார அமைச்சின் மேலதிக செயலரிடம் விசாரித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (ஒ,5,22)

## பாதுகாப்பு...

லூரியில் இரண்டு விடுதிகள் இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரந்தாமனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கைதடி முகாமிலுள்ள இராணுவ அதிகாரிகள் தமது சிப்பாய்கள் 75 பேரை 14 நாள்கள் தனிமைப்படுத்துவதற்கு எமது கல்லூரியின் இரண்டு விடுதிகளைத் தற்காலிகமாகத் தருமாறு கோரியிருந்தனர். அதன் அடிப்படையில் நாம் வழங்கியுள்ளோம். தற்போது 10க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் விடுதிகளை துப்பரவு மற்றும் ஒழுங்கமைக்கும் பணிகளில் ஈடுபடுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த வளாகத்தினுள் கல்லூரியில் பணியாற்றும் 8 அதிகாரிகளின் குடும்பங்கள் வசிப்பதும் குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புத் தரப்பினர் பலர் கொரோனா தொற்றுக்குள்ளாகி வரும் நிலையில் விடுமுறையில் சென்ற படையினரை மக்கள் செறிவுள்ள கோப்பாய் பகுதியில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ஒ,ந,105)

## பயணித்த...

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி விடுமுறை நிறைவு செய்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் திரும்பும்போது இவர்களுடன்கூடப் பயணித்த வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றும் ஸ்ரீபுரவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார். அதையடுத்து ஏனையோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதுமாத்தளன் பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் புதிதாக அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் முகாமில் 71 படையினரும் நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் படையினர் விடுப்பில் வீடு சென்ற நிலையில் கடந்த 21ஆம் திகதி ஒழுங்குபடுத்தப்பட்ட தனியார் பஸ் ஒன்றில் கடமைக்குத் திரும்பியுள்ளனர். வெலிஓயாவைச் சேர்ந்த தனியார் ஒருவரின் பஸ்ஸில் அவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். அந்த பஸ்ஸில் விடுப்பில் வீடு திரும்பிய வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாயும் பயணித்துள்ளார்.

அவர் அநுராதபுரம் ஸ்ரீபுர என்ற இடத்தில் இறங்கியுள்ளார். அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ் வெலிஓயா, முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு படைமுகாங்களுக்குச் சென்று படையினரை இறக்கியுள்ளது. சுமார் 71 படையினர் இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட முகாம்களில் இறங்கியுள்ளனர். அவர்கள் இனங்காணப்பட்டு புதுமாத்தளன் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பஸ்ஸை செலுத்திய சாரதி மற்றும் நடத்துநரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடவடிக்கையையும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மேற்கொண்டுள்ளது.

இந்த பஸ்ஸில் பயணம் செய்து மணலாறு பகுதியிலுள்ள படை முகாமில் இறங்கிய சிப்பாய்கள் இருவருக்குக் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் அவர்கள் இருவரையும் மேலதிக பரிசோதனைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான கொரோனா தொற்றுச் சோதனை எதிர்வரும் வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,எ,22,19,246)

## வவுனியா...

அவரது குடும்பத்தினர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் மாதிரிகள் பெறப்பட்டு அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அவருக்கு கொறொனோ தொற்று இருக்கிறதா என்ற பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்போது அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் கொரோனா நோய்ச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார். (ஒ,5,110)

## வீதியில்...

ழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்புக்கான காரணம் வெளியாகவில்லை. (ஒ,5,37)

## ஓ.எல்...

ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பப்படாது. பெறுபேறுகளை இணையத்தளத்தின் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும் வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெறுபேற்று பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வலய மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு கடவுச்சொல் மற்றும் பயனருக்கான பெயர்கள் வழங்கப்படவுள்ளன.

www.dhebets.lk என்ற இணையத்தள முகவரிக்கு சென்று மாணவர்கள் தமது பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் எனத் தெரிவித்துள்ளார். (எ)

## முப்படையினர்..

டுள்ளது. விடுமுறையில் உள்ள படையினர் தமது தலைமை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

கடற்படையினர் மற்றும் இராணுவத்தினருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

## நாடு...

வதும் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில், ஊரடங்குச் சட்டம் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்பட்டு இரவு 8 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். இந்த மாவட்டங்களில் மே 2ஆம் திகதி வரை தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 வரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மே 4ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வகையில், அத்தியாவசிய தேவைக்காக வெளியில் செல்வோர் அடையாள அட்டை இறுதி இலக்கத்துக்கு அமைய வெளியில் செல்லல் உள்ளிட்ட விடயங்கள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22)

## வடக்கில்...

மைக்குத் திரும்பும் படையினரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்குரிய நிலையங்களாகப் பயன்படுத்துவதற்கும், கொரோனா தொற்றுச் சந்தேக நபர்களைத் தங்க வைப்பதற்கும் இவை பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,105)

# எலிக் காய்ச்சலாலேயே கடற்படை சிப்பாய் சாவாம்!

### வெலிசறையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 27

வெலிசறை கடற்படை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்த கடற்படை அதிகாரிக்கு கொரோனா வைரஸ் பரவவில்லை. அவர் எலிக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழந்துள்ளார். ஆனாலும் அவரது சடலத்தை சர்வதேச தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்தார்.

கடற்படையில் லெப்டினன்ட் கொமாண்டராகச் செயற்பட்ட அதிகாரி திடீர் சுகவீனம் காரணமாக கடந்த 18 ஆம் திகதி வெலிசறை கடற்படை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

எலிக் காய்ச்சல் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார். அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகவில்லை என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படை அதிகாரி சிகிச்சை பெற்று வந்த அறையில், சிகிச்சை பெற்ற மற்றுமொரு கடற்படை அதிகாரிக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளதால், உயிரிழந்தவரின் சடலத்தை சர்வதேச தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,க,22,44)

## வடக்கு மருத்துவமனைகளில்

# முகக் கவசங்களுக்கு பெரும் தட்டுப்பாடு

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

**யாழ்ப்பாணம், ஏப். 27**

**மருத்துவமனைகளை முன்னர் போன்று இயக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளாரெனினும், முகக் கவசம், தனி நபர் பாதுகாப்பு அங்கிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இது சுகாதார சேவைகளில் ஈடுபடுவர்களுக்கு அச்சமாகவுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினர் எச்சரித்துள்ளனர்.**

சங்கத்தின் வடக்குக் கிளையின் இணைப்பாளர் த.காண்டீபன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மருத்துவமனைகளை முன்னர் போன்று இயக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுற்றறிக்கை மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். ஆயினும் அவ்வாறு சேவைகளை விரிவாக்க பல மருத்துவமனைகளிலும் இன்னமும் முகக்கவசம் மற்றும் தனி நபர் பாதுகாப்பு அங்கிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

நோயாளிகள் வரும்போது சரியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நோயாளிகளிடம் இருந்து சுகாதாரப் பணியாளருக்கு கொரோனா தொற்றலாம். சுகாதார சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு இதனால் அச்சம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,த20)



## ரட்ணஜீவன் ஹூலுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

*புது நாடாளுமன்றத்தில் வரும் என்கிறார் தயாசிறி*

கொழும்பு, ஏப். 27

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலுக்கு எதிராகப் புதிய நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் கட்சிகளின் செயலர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே தயாசிறி இவ்வாறு கூறினார். அந்தக் கலந்துரையாடலில் ஹூல் கலந்து கொள்ளவில்லை.

அந்தக் கூட்டத்தில் ஆணைக்குழுவின் சார்பில் கலந்து கொண்ட ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவோ அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினர் நளின் அபேசேகரவோ இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்காமல் அமைதியாக இருந்தார்கள் என்று தெரிய வருகிறது. (ஒ,5)

# பொருள்களின் விலைகள் மே மாதத்தில் அதிகரிக்கும்

*மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் சங்கத் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.27

எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்குப் பின் அரிசி,பருப்பு மற்றும் ரின் மீன் ஆகிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அகில இலங்கை அத்தியாவசிய பொருள்களுக்கான மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் பந்துல ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ நெல்லுக்கான விலை 50 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் அரசு நிர்ணயித்திருக்கும் விலைக்கு அரிசியை விற்க முடியாது. எதிர்காலத்தில் நாட்டரிசி ஒரு கிலோ 105 ரூபாவாகவும் சம்பா 110 ரூபாவாகவும் உயர்வதற்கு வாய்ப்புண்டு. அரசு பருப்புக்கு சில்லறை விலையை நிர்ணயித்த போதிலும் மைசூர் பருப்பு ஒரு கிலோவின் விலை 180 ரூபாவாக உயர்ந்துள்ளது.

தமிழ்சிங்கள புது வருடத்துக்கு முன் டொலர் ஒன்றின் விலை 180 ரூபாவாகும். இப்போது 195 முதல் 200 ரூபா வரை அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்பட்டும் பொருள்களின் விலைகளும் எதிர்காலத்தில் அதிகரிக்கும்.

ஒரு கிலோ 180 ரூபாவாக விற்கப்படும் பருப்பு 200 ரூபாவாகவும் 220 ரூபாவாக விற்கப்படும் ரின் மீன் 250 ரூபாவாகவும் உயர்வதற்கு வாய்ப்புண்டு என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## சீதுவ இராணுவ முகாம் பூட்டு

கொழும்பு,ஏப்.27

சீதுவ இராணுவ விசேட படைப்பிரிவின் அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பதாகக் கண்டறியப்பட்டதையடுத்து, அந்த படை முகாம் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது.

அவருடன் தொடர்புபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

இவரின் மனைவி வெலிசறக் கடற்படை முகாமில் பணியாற்றியுள்ளார். அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில், இவருக்கும் தொற்றினம் காணப்பட்டது.

தொற்றுடன் இவர் பலருடன் பழகியிருக்கலாம் என்பதால் முகாம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (க)

## குணமடைந்தாலும் மீண்டும் வரலாம்

*கொரோனா தொற்று குறித்து உலக சுகாதார அமைப்பு கருத்து*



கொழும்பு, ஏப். 27

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களுக்கு மீண்டும் இந்தத்தொற்று ஏற்படாது என்பதில் எவ்வித உண்மையும் இல்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆகவே குறித்த தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்ந்தும் தனிமைப்படுத்தி வைத்தல் சிறந்தது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளாக அறிக்கையொன்றை ஆதாரமாகக் கொண்டு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (து)

## ஊரடங்கு நடைமுறை மீண்டும் தெளிவூட்டல்

கொழும்பு, ஏப்.27

தேசிய அடையாள அட்டை இலக்கங்களின் அடிப்படையில் மக்கள் வெளியில் செல்வது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் இடங்களில் தான் பெரும்பாலும் நடைமுறையாகும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊரடங்குச் சட்ட தளர்வு இடங்களில் மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவே அடையாள அட்டை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் ஊரடங்கு நடைமுறையில் உள்ள இடங்களில் உள்ளவர்கள் அவசர தேவை இருந்தால், அந்தப் பகுதியில் மருந்தகம் வீடுகளுக்கு அருகே திறந்து இருக்குமாயின், இந்த அடையாள அட்டை முறைமையைப் பின்பற்றலாம்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் இடங்களில் இந்த முறைமையைப் பின்பற்றப்படுவதே இலக்கு. உரிய காரணங்கள் இன்றி ஊரடங்கை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (க)

## 10 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு கிடைக்கும்

கொழும்பு, ஏப்.27

எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அங்கவீனக் கொடுப்பனவு, சிறு நீரக நோயாளிகளின் கொடுப்பனவு, சமுர்த்திக் கொடுப்பனவு, முதியோர்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்டவற்றை உரிய திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான நிதியும் திறைசேரியில் உள்ளது என்று நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்டிகல சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாவட்டங்களில் தபால் நிலையங்களை மீண்டும் திறப்பது தொடர்பாக நேற்று ஒரு சுற்று பேச்சு நடத்தப்பட்டது. இதன்போது தபால் நிலையங்களை மீண்டும் திறப்பது தொடர்பான அத்தியாவசிய சேவைகள் குறித்த விவரங்களை தபால் துறை, ஜனாதிபதி பணிக்குழு முன் தாக்கல் செய்துள்ளது. (ப)

# கிம் ஜோங் உன் மூளைச் சாவு?

## ஜப்பானிய ஊடகங்கள் தகவல்

பியாங்யாங், ஏப்ரல் 27

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், மூளைச்சாவடைந்தார் என்று ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஜப்பானிய ஊடகங்களின் செய்தி, கிம்மின் உடல்நிலை கவலைக்கிடம் என்று முன்னதாக சி.என்.என் வெளியிட்ட செய்தியை ஒட்டியதாக அமைந்துள்ளது.



வடகொரிய அதிபர் கிம் ஜோங் சமீபகாலமாக வெளி உலகுக்கு வரவில்லை. வடகொரியாவின் தந்தை எனபடும் கிம் இல் சங்கின் பிறந்த தின கொண்டாட்டத்தில் அதிபர் கிம் ஜோங் உன் பங்கேற்கவில்லை. கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற தனது தாத்தாவின் பிறந்தநாள் விழாவில் அதிபர் கிம் ஜோங் உன் கலந்து கொள்ளாதது சந்தேகங்களை எழுப்பியது. கடந்த 2011ஆம் ஆண்டு அதிபராக வந்தபின் முதல்முறையாக இந்த நிகழ்ச்சியை கிம் தவிர்த்துள்ளார். சமீபத்தில் அவருக்கு நடந்த இருதய அறுவை சிகிச்சைக்குப் பின்னர் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக சி. என்.என் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் அமெரிக்க உளவுத்துறையும் இதை தீவிரமாகக் கண்காணித்து வருகிறதாக செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் கிம் மூளைச் சாவடைந்தார் என்று ஜப்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# பாகிஸ்தானால் நேற்று ஏவுகணைச் சோதனை

இஸ்லாமபாத், ஏப். 27

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாகிஸ்தான் நேற்று ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது.

ஏற்கனவே கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் பாகிஸ்தான் அரசு, ஊரடங்கால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார இழப்பை ஈடுகட்ட முடியாமல் திணறி வருகிறது. இதனால் பாகிஸ்தானின் பொருளாதார பிரச்சினையை சரி செய்ய சர்வதேச நிதியம் அந்த நாட்டுக்கு நிதியுதவி அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. அதேபோல் அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் கொரோனா அச்சுறுத்தல் மற்றும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாகிஸ்தான் நேற்று கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை ஏவி சோதித்தது. அரேபிய கடல் பகுதியில் இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் கடற்படை தெரிவித்துள்ளது. (ம)

# கசையடியை நிறுத்தியது அரேபியா

ரியாத், ஏப். 27

கசையடித் தண்டனையை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளது சவுதியின் உயர் நீதிமன்றம். இதனால் இனி அங்கு கசையடித் தண்டனைகள் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் கசையடி தண்டனையை நீக்குவது என்பது நீதித்துறையை நவீனமயமாக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சவுதியின் உச்ச நீதிமன்ற பொது ஆணையம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ம)

# 89 பயங்கரவாதிகள் நைஜீரியாவில் பலி

## அந்த நாட்டு இராணுவம் அதிரடி

நைஜர், ஏப். 27

நைஜீரியாவில் சப்ரா மாகாணம் சூரி பகுதியில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகளைக் குறிவைத்து அந்த நாட்டு இராணுவம் நடத்திய தாக்குதலில் 89 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

குறித்த பகுதியில் ஆதிக்கம் செலுத்திவரும் பயங்கரவாதிகள் 3 பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். இந்த நிலையில் அவர்களை மீட்பதற்காக நைஜீரிய இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலிலேயே 89 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பணயக் கைதிகளும் மீட்கப்பட்டனர். (ம)



## சுந்தர் பிச்சையின்

# கடந்த வருட வருமானம் 6 ஆயிரம் கோடி ரூபா!!

நியூயோர்க், ஏப். 27

கூகிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக உள்ள சுந்தர் பிச்சையின் கடந்த வருட வருமானம் 6 ஆயிரம் கோடி ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அவருடைய வருமானத்தில் பெரும்பான்மை சதவீதம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகள் மூலம் கிடைக்கும் வருமானம் ஆகும். சுந்தர் பிச்சையின் ஆண்டு ஊதியம் 2019ஆம் ஆண்டில் 6.5 லட்சம் டொலராக இருந்தது. இது இந்த ஆண்டு 2 மில்லியன் டொலராக உயர்த்தப்பட்டுள்ளது. (ம)



# ஈரானால் இறுக்கமாக கண்காணிக்கப்படுகிறது அமெ.

தெக்ரோன், ஏப். 27

அமெரிக்காவின் நடவடிக்கையை நெருக்கமாகக் கண்காணித்து வருகிறோம் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவுஹானி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஈரானுக்கு இடையே பொருளாதாரத் தடை காரணமாக மோதல் நிலவி வருகிறது. இந்த நிலையில் கொரோனா வைரஸ் தொடர்பாக அமெரிக்கா அளித்த மருத்துவ உதவிகளை ஈரான் மறுத்துவிட்டது. மேலும் தங்கள் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் தற்போதைய சூழல் குறித்து ஈரான் அதிபர் கட்டார் இளவரசர் ஷேக் தமீம்மிடம் தொலைபேசியில் பேசியுள்ளார். இந்த உரையாடலில், அமெரிக்காவின் செயல்பாடுகளை ஈரான் நெருக்கமாக கண்காணித்து வருகிறது. எனினும் பிராந்தியத்தில் நாங்கள் மோதலை ஆரம்பிக்க மாட்டோம் என்று ஹசன் ரவுகானி தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக சில நாட்களுக்கு முன்னர் சர்வதேச விதிகளை மீறும் ஈரானின் போர் கப்பல்களை அழிக்குமாறு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# நாடாளுமன்றை கூட்டுவது தற்கொலைக்கு சமனானது

## சட்டத்தரணி அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.27

கலைக்கப்பட்ட எட்டாவது நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு கோருவது ஜனாதிபதியை தற்கொலைக்கு அழைப்பதற்குச் சமனாகும். கடந்த கால ஜனாதிபதியிடம் இத்தகைய மாயைகள் பலித்திருந்தாலும் தற்போதைய ஜனாதிபதியிடத்தில் இவ்வாறான சூழ்ச்சிகள் ஒருபோதும் பலிக்காது.

இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

அரசமைப்பு நெருக்கடியொன்று தோற்றம் பெறுவதற்கான அதிக சாத்தியப்பாடுகள் இருக்கின்ற நிலைமையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுள்ள நிலையில் மீண்டும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டினால் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் வெறிதாகிவிடும். இதனால் எதிர்க்கட்சிகள் மீண்டும் பலமாவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் தனது அரசியல் நலனுக்காக நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி தயங்கி வருகின்றார் என்று முன்வைக்கப்படும் விமர்சனம் தொடர்பாக செவ்வியில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்துள்ளதாவது;

நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபமடைவதற்கு திட்டமிடுகின்றன. அவர்களைப் பொறுத்தவரையில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமது தோல்விகளை முன் கூட்டியே உணர்ந்துள்ளார்கள். ஆகவே தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. தற்போது தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை வைத்துப் பார்க்கின்றபோது அவர்களிடையே பிளவுகள் காணப்படுகின்றன. ஆகவே அந்தப் பிளவுகளை போக்கி மீண்டும் ஒன்றிணைவதற்கு சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

எட்டாவது நாடாளுமன்றம் எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதாக இருக்கின்றது. அது கலைக்கப்பட்டாகி விட்டது. உயிரிழந்த நாடாளுமன்றுக்கு மீண்டும் உயிர்கொடுப்பதற்கு விளைகின்றார்கள். அதேநேரம், மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படுகின்ற போது ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்துக்கு முட்டுக் கட்டைகளை இடுவதற்கு விளைகின்றார்கள். இந்த விடயங்களை அடிப்படையாகவைத்துக்கொண்டே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளவும் கூட்டுமாறு கோரிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதாவது, ஜனாதிபதிக்கும், ஆளும் தரப்புக்கும் எதிராக எதிர்க்கட்சிகளாகிய அவர்கள் செயற்படுவதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டித்தாருங்கள் என்று கோருகின்றார்கள். பழைய நாடாளுமன்றைக் கூட்டி தற்கொலை செய்யுங்களென்று அழைத்தால் ஜனாதிபதி இசைந்து வருவாரா? இப்படியான கோரிக்கைகளை கடந்த ஜனாதிபதி ஏற்றிருக்கலாம். தற்போதைய ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவே மாட்டார். தற்போதைய சூழலில் கொரோனா ஒழிப்புக்காக நாடாளுமன்றத்தினைக் கூட்டி தீர்மானங்களை எடுக்க வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை. ஆகவே நாடாளுமன்றைக் கூட்டுவதால் எவ்விதமான பயனுமில்லை. என்றார்.

(ப)

# நூற்றுக்கணக்கான வாகனங்கள் பறிமுதல்

முல்லைத்தீவு, ஏப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட நூற்றுக்கும் அதிக மானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்கு சட்டம் நடைமுறையில் உள்ள காலங்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறி அனுமதியற்ற முறையில் பயணித்தல் மற்றும் வீதி போக்குவரத்து சட்டத்தை மீறி செயற்பட்டவர்கள் எனப் பலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களின் மோட்டார் சைக்கிள்கள் பொலிஸ் நிலையத்தில் அதிகளவில் அடுக்கி விடப்பட்டுள்ளன.

இவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஓ.5,19)

# கோடாவுடன் கைது

கொழும்பு, ஏப்.27

குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பஹாகொட நுகேகொட பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரிடமிருந்து 33 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் (45போத்தல்கள்), மதுபான வடித்தலுக்காக பயன்படுத்தும் 3 இலட்சத்து 55 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவும் (2 பீப்பாய்கள்) கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆற்றுக்கு அருகில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மதுபான வடித்தலுக்காகப் பயன்படுத்தும் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 5 இலட்சத்து 5 ஆயிரம் மில்லிலீற்றர் (3 பீப்பாய்கள் ) கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ப)

# நாடு முழுவதும் மாலையில் காற்றுடன் மழை பெய்யும்

கொழும்பு, ஏப்.27

நாடு முழுவதும் மழையுடனான வானிலை இன்றிலிருந்து தற்காலிகமாக சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் தென் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, நுவரெலியா,காலி மற்றும் மாத்தறைமாவட்டங்களிலும்சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர் பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு முதல் தென்கிழக்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும். புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது சாதாரண முதல் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 7080 கிலோ மீற்றர் வரையும்) பலமான காற்று வீசுவதுடன் அக் கடற் பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

(ப)

# நாடாளுமன்ற கலைப்புக்கு எதிராக 9 வழக்குகள்

கொழும்பு, ஏப்.27

ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது போனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது சட்டவிரோதம் என்று அறிவிக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் 9 வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகளும் மற்றும் சிவில் அமைப்புகள் பலவும் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளன என்று அறிய முடிகிறது.

இந்த வாரமே இந்த வழக்குகள் அனைத்தும் தாக்கல் செய்யப்படும் என்றும் மேலும் அறிய முடிகிறது.

(எ)

# இலங்கை மாணவர்கள் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஏப்.27

இந்தியாவின் கோயம்புத்தூரிலிருந்து 113 இலங்கை மாணவர்கள் அடங்கிய குழுவொன்று நாடு திரும்பியுள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யுஎல் 1194 என்ற சிறப்பு விமானத்தின் மூலமாக இவர்கள் நேற்று நண்பகல் 12.05 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலைய தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த மாணவர்களை அழைத்து வருவதற்காக நேற்றுக் காலை 9:05 மணிக்கு மேற்படி விமானமானது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் கோயம்புத்தூரிற்கு புறப்பட்டிருந்தது. இந் நிலையில் நாடுதிரும்பியுள்ள மாணவர்கள் குழுவை சுகாதார அமைச்சின் ஆலோசனைகளுடன் தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை பங்களாதேஷின் டாக்கா, இந்தியாவின் பெங்களூர் ஆகிய பகுதிகளிலிருந்து செவ்வாய்க்கிழமை மற்றொரு தொகுதி மாணவர்களும் நாட்டுக்கு அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ப)

# பப்பாசி செய்கையாளர்கள் வவுனியாவில் கடும் அவதி!

## மரங்களிலேயே பழுதடையும் அவலம்!!

வவுனியா, ஏப்.27

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாக வவுனியா மாவட்ட பப்பாசிச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



இம்முறை வவுனியா மாட்டத்தின் நெடுங்கேணி, தாலிக்குளம், பறங்கியாறு, கணேசபுரம், மயிலங்குளம், செட்டிகுளம் போன்ற பகுதிகளில் பெரிய அளவில் பப்பாசி செய்கையினை விவசாயிகள் மேற்கொண்டிருந்தனர். தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊரடங்குச் சட்டம் காரணமாக அவற்றைச் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் மரங்களிலே கனிந்து பழுதடையும் நிலமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து வவுனியாவிற்கு வியாபாரிகள் வருகை தராமையாலும், அதனைச் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன், ஒரு பப்பாசி பழம் 70 முதல் 80 ரூபாக்கு மேல் விற்பனை செய்ததாக தெரிவிக்கும் அவர்கள் தற்போது 10 ரூபாய்க்கு கூட அதனை விற்கமுடியாத நிலையில் நஸ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக கவலை வெயிளிட்டனர். இதே வேளை மரத்திலேயே கனிந்து பழுதடையும் பழங்களை இலவசமாகவும், கால்நடைகளுக்கும் கொடுத்து வருவதுடன் தமது உற்பத்திப் பொருள்களுக்கு சரியான சந்தை வாய்ப்பை அதிகாரிகள் பெற்றுத் தரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (ப-110)

# கலந்துரையாடல்

கொழும்பு, ஏப்.27

நாட்டில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் உள்ள மாவட்டங்களில், அஞ்சல் நிலையங்களைத் திறப்பது தொடர்பில், உயர்மட்டக் கலந்துரையாடல் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது.

அஞ்சல் நிலையங்களை மீளத் திறப்பது தொடர்பில் பணிக்குழுவினர் தகவல்களை முன்வைத்துள்ளனர் என்று அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைவாக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

# 1,291 பேருக்கு பரிசோதனை

காலி, ஏப்.27

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் கொரோனா பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நேற்று வரை ஆயிரத்து 291 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களில் 20 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சம்பத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 150 தொடக்கம் 200 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# 200 கோடி டொலர் தேவை

கொழும்பு, ஏப்.27

கொரோனாவால் சிதைவடைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு 200 கோடி அமெரிக்க டொலர் தேவை என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

இதற்காக வெளிநாட்டுக் கடன்களைப் பெறுதல் உள்ளிட்ட பல வேலைத் திட்டங்களை அரசு செய்ய வேண்டியுள்ளது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்கள் பலவற்றை அடைப்பதற்கு இந்த வருடம் மாத்திரம் 3 ஆயிரத்து 200 மில்லியன் டொலர் தேவை. அதை அடைப்பதற்கான சலுகைக் காலத்தை நாம் சில நாடுகளிடம் கோரியுளோம்.

200 மில்லியன் டொலர் உதவி வழங்கப்படும் என்று உலக வங்கி எமக்கு உறுதியளித்துள்ளது. அதேபோல் மேலும் பல நாடுகளும் எமக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளன. என்றார். (எ)

# அபாய வலயத்துக்குள் உணவு தயாரித்தவர் கைது

கொழும்பு, ஏப்.27

ஊரடங்கு உத்தரவை மீறி, எவ்வித முன் அனுமதியும் இன்றி, சுகாதார ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது, மக்களுக்கு விநியோகிப்பதற்காக உணவு தயாரித்தவர் பேருவளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உணவு தயாரிப்பதற்காகப் பயன்படுத்திய பெருமளவு பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பேருவளை அதிக அவதானமிக்க வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மக்களை ஒன்றுதிரட்டி உணவு விநியோகிப்பதானது, சுகாதாரப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பேருவளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க)





கல்ஹின்னைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணிக்கு கடுமையான மழையுடன் வீசிய மினி சூறாவளியின் காரணமாக மரங்கள் வீட்டுக் கூரைகளின் மேல் வீழ்ந்ததால் கூரை சேதமாகிறது. மரங்கள் முறிந்து வீழ்ந்தன. (ந)

# நாட்டுக்கு ஆசி வேண்டி கதிர்காமத்தில் வழிபாடு

## கோத்தா பங்கேற்பு

கொழும்பு, ஏப். 27

மக்களுக்கும் நாட்டுக்கும் ஆசி வேண்டி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் பிரித் பாராயண நிகழ்வொன்று வரலாற்று முக்கியத்துவமிக்க கதிர்காமம் புண்ணியபூமியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது.

கதிர்காமம் புண்ணிய பூமிக்குச் சென்ற ஜனாதிபதி கதிர்காமம் ரஜமகா விகாரையின் விகாராதிபதியும் ருகுணுமாகம்பத்துவையின் தலைமை சங்கநாயக்கருமான சங்கைக்குரிய கொபவகதம்மின்தேரோ அவர்களை சந்தித்து ஆசிர்வாதங்களை பெற்றுக்கொண்டார். (ஒ,5)

# நாடாளுமன்றுக்குப் பலத்த பாதுகாப்பு! தீவிரவாத அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா

## முன்னாள் அமைச்சர்கள் கேள்வி

நாட்டில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அளவிற்கு ஏதேனும் தீவிரவாத அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டிருக்கிறதா எனக் கேள்வியெழுப்பி முன்னாள் அமைச்சர்களான எரான் விக்ரமரத்ன மற்றும் ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்ற பொதுச்செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கடந்த வியாழக்கிழமை இரவு முதல் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதிக்கான பாதுகாப்பு பிரச்சினை எழுந்துள்ள நிலையில், அதுபற்றி உங்களுடன் கலந்துரையாடுவதற்கு நேற்று நானும், ஹர்ஷ டி சில்வாவும் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தோம். எனினும் அன்றைய தினம் நீங்கள் வருகை தந்திருக்காத காரணத்தினால் நாடாளுமன்ற பாதுகாப்புப் பிரிவின் பிரதி சார்ஜன்ட் குஷான் ஜயரத்னவைச் சந்தித்தோம். வழமையாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அதிக எண்ணிக்கையிலான இராணுவத்தினரும் அங்கிருந்தனர். நாடாளுமன்றத்திற்கான பாதுகாப்பு வழமைபோன்று வழங்கப்பட வேண்டுமென நீங்கள் குறிப்பிட்டதாக ஜயரத்ன தெரிவித்தார். அவ்வாறிருக்கையில் நாடு முழுவதுமாக முடக்கப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்திற்கான பாதுகாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியமென்ன? அத்தகைய அச்சுறுத்தல் நிலைமை என்னவென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம். ஏதேனும் தீவிரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல்கள் உள்ளனவா? எனினும் பாதுகாப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியளவிற்கு அச்சுறுத்தல்கள் ஏதேனும் இருப்பதாக எமக்குத் தகவல் கிடைக்கவில்லை என்றுள்ளது. (ப)

# கசிப்பு உற்பத்தி நிலையம் தீயிட்டு எரித்து அழிப்பு

சாவகச்சேரி,ஏப்.27
சாவகச்சேரி வடக்கு கிராம புவில் பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று தீயிட்டு எரித்து அழிக்கப்பட்டது.
அந்தப் பகுதி கிராம மக்களும், இளைஞர்களும் இணைந்து இந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை அழித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
நாட்டில் மதுபானசாலைகள் மூடப்பட்டதையடுத்து கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது.
இந்நிலையில் சாவகச்சேரி கிராம்புவில் குடியிருப்பற்ற வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்வதை அறிந்த பொதுமக்களும் இளைஞர்களும் அங்கு திரண்டனர்.
இவர்கள் வருவதைக் கண்ட கசிப்பு உற்பத்தியாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர்.
இதனையடுத்து அவர்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட கோடா, கசிப்பு மற்றும் உபகரணங்களை. தீயிட்டு எரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



# ஊரடங்கு வேளையில் தொடரும் திருட்டுக்கள்

வவுனியா, ஏப். 27

**வவுனியா– செட்டிகுளம் வீரபுரத்தில் வீடொன்றில் நேற்றுப் பிற்பகல் வேளையில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.**



வீட்டுக் கதவைத் திறந்து அலுமாரியை உடைத்து அங்கிருந்த 40 ஆயிரம் ரூபா பணம், ஒரு பவுண் நகை என்பவற்றை திருடிச் சென்றுள்ளதோடு வீட்டில் இருந்த ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.
திருட்டு இடம்பெற்றபோது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,18)

# கரும்புத் தோட்டத்துக்கு விசமிகளால் தீ வைப்பு

திருமலை,ஏப்.27
திருகோணமலை கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குரிய விதை நாற்றுப் பண்ணையில் நான்கு ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட கரும்புச் செய்கைக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது என்று அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.
அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தளாய் சீனித்தொழிற்சாலையை அண்டிய பகுதியில் எம்.சி.சுகர்ஸ் லங்கா நிறுவனத்தால், கரும்பு விதைகள் நடப்பட்ட நான்கு ஏக்கர் கரும்புச் செய்கைக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.
இராணுவத்தினர் பொலிஸார் ,பாதுகாப்பு படையினர்,மற்றும் தொழிலாளர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர். (க)

# பயிற்றுநர்களுக்கு உதவி

கொழும்பு, ஏப்.27
கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பயிற்றுநர்ளுக்கு உதவ விளையாட்டுத்துறை அமைச்சு விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.
நம் நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள விளையாட்டு பயிற்றுநர்கள் அனைவருக்கும் தலா 5000 ரூபாவை உதவி தொகையாக வழங்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ் ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
இந்த உதவித் தொகையானது மாதாந்த வருமானம் இல்லாமல், அரச அல்லது வேறு ஏதாவது முறையில் நிதி உதவிகள் கிடைக்காத விளையாட்டுப் பயிற்றுநர்களுக்கு இந்த நிதியை வழங்குமாறு நாட்டிலுள்ள அனைத்து விளையாட்டுச் சங்கங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சங்கத் தலைவர்களைத் தொடர்பு கொண்டு தமக்கான உதவித் தொகையை பெற முடியும் - என்றார். (ப)

# உப பயிர்செய்கை விதைகளுக்கு மன்னார் மாவட்டத்தில் தட்டுப்பாடு

## விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார், ஏப். 27
மன்னாரில் விவசாய உப பயிர் செய்கைக்கான விதைகளுக்குப் பெருமளவில் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று மன்னார் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
உப பயிர்ச் செய்கைகளை ஊக்குவிக்கும் அரசின் செயற்றிட்டத்தில் இந்தமுறை மன்னார் மாவட்டத்தில் விவசாயப் பெருநிலப்பரப்பாக உள்ள மாந்தை, நானாட்டான், மடு, முசலி போன்ற இடங்களில் விவசாயிகள் தங்கள் காணிகளில் உப உணவுப் பயிர்களான கடலை, பயறு, கௌப்பி, உழுந்து போன்றனவற்றைச் செய்வதற்காக நிலங்களைத் தயார்ப்படுத்தி வருகின்றனர்.
இவற்றுடன் உப பயிர்களாக நிலக்கடலை, பயறு, கௌப்பி போன்ற தானியச் செய்கையிலும், கத்தரி, மிளகாய், வெண்டி, பயிற்றை போன்ற மரக்கறிப் பயிற்செய்கையிலும் ஈடுபடத் தயாராகின்றனர். ஆனால் விதைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கின்றனர்.
அவர்கள் மேலும் தெரிவிப்பதாவது:
மன்னார் மாவட்டத்தில் ஏனைய தொழில்கள் செய்பவர்கள் இருந்தாலும் விவசாயம் செய்பவர்கள்தான் அதிகம். கொரோனா வைரஸ் ஊரடங்கு காரணமாக, அறுவடை செய்த நெல்லை விற்பனைசெய்ய முடியாமலுள்ளது. விற்பனை செய்யப்பட்ட நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளோம்.
இது இவ்வாறிருக்க முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் கட்டுக்கரையில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக குறுகிய அளவு நிலத்தில் மட்டுமே விவசாயம் செய்ய அனுமதிக்கப்படும் என்று பேசப்பட்டது. அதனால் இன்று உப பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோம். தற்போது விவசாயிகள் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.
அவற்றுக்குச் சலுகைகள் மற்றும் விலை ஊக்குவிப்புகள் எவ்வாறு இருக்குமோ தெரியவில்லை. மேட்டு நிலப்பயிர்ச்செய்கைக்குத் தேவையான சிறு தானிய வகைகளான கடலை, உழுந்து, பயறு, கௌப்பி, வெண்டி, பயிற்றை போன்ற விதைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதிகாரிகள் இவ்வாறான விதைகள் மற்றும் உரவகைகளை மானியமாகத் தருவதற்கு முன்வர வேண்டும்.
அத்துடன் வேலிகள் அடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் முட்கம்பிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. கடைகளில் கேட்டால் இல்லை என்கிறார்கள் அல்லது விலை அதிகமாக சொல்கிறார்கள். உரிய அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**பாஸ் பிரச்சினையை தீர்த்து வையுங்கள்**

கொரோனா பிரச்சினையால் விவசாயிளுக்கு ஓரிரு நாள்களுக்கென்றே பாஸ் தரப்படுகின்றது. விவசாயம் செய்வதென்றால் தினமும் சென்றுவரவேண்டிவரும். விவசாயிகள் வீதியில் நடமாட ஓரிரு நாள்களுக்கு மட்டும் பாஸ் தருவதாக இருந்தால் தோட்டங்களுக்குச் சென்றுவருவது யார்? பயிர்களைக் கவனிப்பது யார்? பயிர்ச் செய்கைக் காலம் மூன்று மாதம் என்றால் அந்த மூன்று மாதங்களுக்குரிய பாஸ் அனுமதியை தந்தால்தானே விவசாய நடவடிக்கையைச் சிரமம் இல்லாமல் மேற்கொள்ள முடியும். பொலிஸாரோ படைத்தரப்பினரோ அலுவலர்களோ புரிந்துகொள்ளவேண்டும்.



**கால்நடைகளை கட்டி வளர்க்கவும்**

கடந்த காலத்தில் கால்நடைகளால் பயிர்கள் சேதப்படுத்தப்பட்டு விவசாயிகள் பெரு இழப்பைச் சந்தித்திருந்தனர். அவ்வாறான நிலை இனியும் ஏற்படாமல் பண்ணையாளர்கள் கால்நடைகளை இரவில் பட்டிகளில் அடைத்துப் பராமரிக்க வேண்டும். இதனைப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் கண்காணித்து விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதுகாக்க முன்வர வேண்டும். என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-213)

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்





அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச் சங்கத்தினூடாக கிளிநொச்சி திருநகர், உருத்திரபுரம், உதயநகர், ஜெயந்திநகர், பரந்தன் போன்ற கிராமங்களில் வாழும் 64 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)





மன்னார் நலன்புரிச் சங்கத்தால் ஐக்கிய இராச்சியத்தின் ஏற்பாட்டில் நானாட்டான், முசலி, மன்னார் பிரதேச செயலர்கள் பகுதிகளில் 'கொரோனா' அச்சுறுத்தல் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து வறுமையில் உள்ள சுமார் 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



அரசின் அறிவுறுத்தல்களுக்கமைவாக மட்டக்களப்பு மாவட்டசெயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சமூகமளிக்கும் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்களின் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் பயன்படுத்துவதற்காக வெப்ப அளவீட்டுக் கருவிகள் மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டுள்ளன. (ம)



யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 27 இளம் கலைஞர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் யாழ்ப்பாண பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையில் வழங்கப்பட்டன. (ம-23)






வேர்ட் விசன் நிறுவனத்தின் திட்ட பயனாளிகளை உள்ளடக்கிய கிராமங்களான கோணாவில், புதுமுறிப்பு, செல்வாநகர், மலையாளபுரம், மாயாவனூர் சாந்தபுரம் ஆகியவற்றில் வசிக்கும் சிறப்புத் தேவையுடையோர் மற்றும் பெண்தலைமைக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)







வரோட் நிறுவனத்தால் 4ஆம் கட்ட நிவாரணம் வழங்கும் செயற்பாடாக, கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் முகமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட புளியங்குளம், மதியாமடு, நைனாமடு, சின்ன அடம்பன், புளியங்குளம், கனகராயன்குளம், மன்னகுளம் மாரஇலுப்பை குளவி சுட்டான், ஒலுமடு, மருதோடை கீரிசுட்டான், கற்குளம், பட்டிக்குடியிருப்பு ,நெடுங்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 140 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள வட்டுக்கோட்டை முதலி கோவில் பகுதியைச் சேர்ந்த 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இந்த உதவியை வழங்கியது. (ம)

# கிரிக்கெட்டின் கடவுளை விஞ்சுவார் விராட் கோலி

## பிரட் லீ அழுத்தம் திருத்தம்

*சிட்னி, ஏப்ரல் 27*
*சச்சின் ரெண்டுல்கரின் 100 சதங்கள் என்ற சாதனையை முறியடிப்பார் இந்திய அணியின் தற்போதைய தலைவரான கோலி - என்று தெரிவித்துள்ளார் பிரட் லீ.*



கோலி தொடர்பில் லீ மேலும் தெரிவித்ததாவது:
கிரிக்கெட்டின் கடவுளைக் கடக்க வேண்டுமெனில் 3 விடயங்களைக் கோலி கவனிக்க வேண்டியுள்ளது. ஒன்று திறமை என்பது, இதை நீக்கி விடலாம் ஏனெனில் விராட் கோலியிடம் திறமைக்கு பஞ்சமில்லை. அடுத்ததாக உடல் தகுதி. விராட் கோலியிடம் இதுவும் உள்ளது. ஆனால் கிரிக்கெட் விளையாடும் தருணங்களில் மனைவியை பிரிந்திருப்பது. அதுவும் குழந்தை பிறந்து விட்டால் அதைப் பிரிந்து இருப்பது போன்ற மனரீதியான கடினப்பாடுகளை கோலி கடக்க வேண்டும். எனவே திறமை, உடல் தகுதி, மன உறுதி மூன்றும் இருந்தால் அவர் சச்சினை முறியடித்து விடுவார்' என்றார். (ம)

# 2 உலகக் கிண்ணங்களை கைப்பற்றுதல் வேண்டும்

## ரோகித் சர்மா விருப்பம்

புதுடெல்லி, ஏப். 27
அடுத்த மூன்று உலகக்கிண்ணத் தொடரில் இரண்டையாவது கைப்பற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் உப தலைவர் ரோகித் சர்மா.
இந்திய அணியின் ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவராக ரோகித் கருதப்படுகின்றார். ஆனால் இதுவரையில் அவர் எந்தவொரு உலகக்கிண்ணத்தையும் கைப்பற்றவில்லை. இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் ரோகித் சர்மா.
ரோகித் சர்மா மேலும் தெரிவித்ததாவது:
அடுத்து 3 உலகக்கிண்ணத் தொடர்களில் (ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் நடைபெறும் ரி20 உலகக்கிண்ணம், அடுத்த ஆண்டு (2021) இந்தியாவில் நடைபெறவுள்ள ரி20 உலகக்கிண்ணம், 2023ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணம்) குறைந்தபட்சம் 2 தொடரிலாவது கிண்ணம் வெல்ல வேண்டும். அதுவே எனது தனிப்பட்ட நோக்கமாகும் - என்றார். (ம)



# என்றென்றும் ஆர்.சி.பி விராட்கோலி ஆசை!

புதுடெல்லி, ஏப். 27
ஐ.பி.எல் தொடரில் ஆர்.சி.பி அணிக்காக மட்டுமே விளையாடுவேன் என்று தெரிவித்துள்ளார் அந்த அணியின் தலைவரான கோலி.
இது தொடர்பில் கோலி மேலும் தெரிவித்ததாவது:
ஆர்.சி.பி அணியை விட்டு விலகுவது குறித்து என்னால் யோசிக்கக் கூட முடியாது. ஐ.பி.எல்லில் விளையாடும்வரை இந்த அணியை விட்டு விலகமாட்டேன். ஐ.பி.எல்லில் விளையாடும் வரை உரிமையாளருக்காக விளையாட விரும்புகிறேன். அணியை விட்டு வெளியேறும் எந்த சூழ்நிலையும் இதுவரை இல்லை - என்றார். (ம)



# வீரர்களின் ஊதியத்தில் மே.இ.தீவு பிடித்தம்!

ட்ரினிடாட், ஏப். 27
வீரர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யவுள்ளது மேற்கிந்தியக் கிரிக்கெட் சபை. (ம)

# சச்சினைச் சீண்டினேன் மன்னிப்புக் கேட்டேன்!

## முஸ்டக் வெளிப்படை

இஸ்லாமபாத், ஏப். 27
சச்சினைச் சீண்டினேன். அவர் கூறிய பதிலால் அவரிடம் மன்னிப்புக் கேட்டேன். வெட்கப்பட்டேன் - என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்டக்.



சச்சினுடன் இடம்பெற்ற வார்த்தை மோதல் தொடர்பில் முஸ்டக் மேலும் தெரிவித்ததாவது:
1997ஆம் ஆண்டு கனடாவில் நடந்த சஹாரா கிண்ண கிரிக்கெட் போட்டியின்போது புதிய யுக்தியின் ஒரு பகுதியாக சச்சினை நான் வேண்டுமென்றே முதல்முறையாக சீண்டினேன். அதற்கு சச்சின் என்னிடம் அமைதியாக வந்து, நான் உங்களிடம் ஒரு போதும் தவறாக நடந்ததில்லை. பிறகு ஏன் நீங்கள் என்னிடம் தேவையின்றி வம்பு செய்கிறீர்கள் என்று கேட்டார். அவர் அவ்வாறு கேட்டதும் எனக்கு தர்மசங்கடமாகி விட்டது. என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மேலும் அவர், ஒரு மனிதராகவும், வீரராகவும் உங்கள் மீது மிகுந்த மதிப்பு வைத்துள்ளேன் என்றும் கூறினார். அது எனது மனதை மேலும் உலுக்கியது. அதன் பிறகு நான் அவரை ஒரு போதும் வசைபாடியது இல்லை. அந்த ஆட்டம் முடிந்ததும் அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன் - என்றார். (ம)

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தென்கயிலை ஆதீனமானது பல்வேறு நிவாரணப் பணிகளை செய்து வருகிறது. அந்த வகையில் இதுவரை சுமார் 800 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)





யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான பரிபாலன சபையினர், நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு, புனித நகர், குடத்தனை ஆகிய கிராமங்களில் வசித்து வருகின்ற 600க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர். (ம)



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் தொழிலிழந்து வறுமையில் சிக்கியுள்ள மக்களுக்கு பலரும் தமது உதவிக்கரங்களை நீட்டி வருகின்றனர். இந்த நிலையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான மே.வினோராஜ் மட்டக்களப்பு மாவட்டம் பேரதிவுப் பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட எல்லைப்புறக் கிராமங்களான கண்ணபுரம், நெல்லிக்காடு, உள்ளிட்ட பல கிராமங்களில் வாழும் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கினர். (ம)





தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆச்சிரமத்தினர் பளை வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் வதியும் பொருளாதார நிலையில் பின்தங்கிய 57 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொருள்களை வழங்கினர். (ம)





நோர்வே ஒஸ்லோ ஜெயதுர்க்கை அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ அமிர்த சிவலோகநாத குருக்களின் நிதி உதவியில் கிளிநொச்சியில், கொரோனா ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட 74 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)





ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு கிக்ஸ் இளைஞர் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் 5 பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கடமைப் பிரதேசத்தில் கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்று சுய தனிமைப்படுத்தப்பட்ட 32 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். (ம)



கொரோனா வைரஸின் பரவலைத் தடுப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மட்டக்களப்பு - போரதீவுப் பகுதிவாழ் மக்களுக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர். (ம)





சுவிஸில் இயங்கும் அமுதசுரபி தமிழர் ஒன்றியத்தால் ஈழவிழுதுகள் அறக்கட்டளை ஊடாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட தாயக உறவுகளுக்காக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

## இளம் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலையில் டில்சான் பிரதீபா (வயது 31) எனும் ஒரு பிள்ளையின் தாயார் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகத்தில் அவருடைய கணவனை கைது செய்துள்ளனர். அவர் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குடும்பத்தகராறு காரணமாகவே அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.ந26)

## எரியுண்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

மயிலங்காடு முருகமூர்த்தி ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.
மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த நடேசமூர்த்தி (வயது-82) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.(ஒ.ந20,114)



# குடிசைகள் தீயால் எரிந்து சாம்பலாகின

**யாழ்ப்பாணம், ஏப். 27**

**ஆழியவளை சுனாமிக் குடியிருப்பு பகுதியில் குடிசை ஒன்று முழுமையாகவும் மற்றொரு குடிசை பகுதியளவிலும் எரிந்துள்ளன.**

ஆழியவளை கிராம அலுவலர் பிரிவிலுள்ள சுனாமிக் குடியிருப்பு பகுதியில் ஓலைக் குடிசை ஒன்று எரிக்கப்பட்டுள்ளது. அந்தக் குடிசையின் உரிமையாளரே மதுபோதையில் வந்து தனது வீட்டுக்கு தீ வைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாக அயலவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
குடிசை எரியும்போது அதன் நெருப்புத் துகள்கள் காற்றுடன் பறந்து பக்கத்து வீட்டில் விழுந்தமையால் அந்த வீடும் பகுதியளவில் எரிந்துள்ளது. இதனை அயலவர்கள் அணைத்துள்ளனர். அந்த வீட்டில் தையல் வேலை செய்வதனால் வாடிக்கையாளரால் தைப்பதற்காக கொடுக்கப்பட்ட துணிகளும் தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.
இது தொடர்பில் பளைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5,70)

*அத்தியாவசிய சேவை அறிவிப்புடன்*

# மலக்கழிவு கொட்டிய பவுசர் மடக்கிப் பிடிப்பு!

நீதிமன்றின் உத்தரவை மீறி மலக் கழிவுகளை ஏற்றி வந்து கல்லுண்டாயில் வெளியில் கொட்டுவதற்கு முயற்சித்த தனியார் நிறுவனத்தின் வாகனம் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொன்னாலை வீதி கல்லுண்டாய் வெளியில் இடம்பெற்றது.
மாலை வேளைகளில் மலக்கழிவு மற்றும் தனியார் நிறுவனக் கழிவுகளை இனந்தெரியாதோர் கொட்டிவந்த நிலையில் அங்கு வந்த மக்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஊடாக வாகனத்தையும் அதில் வந்த இருவரையும் பிடித்து மானிப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.
நவாலி மக்களின் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு கல்லுண்டாயில் மலக்கழிவுகளைக் கொட்டுவதற்கு தடைவிதித்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் 2018ஆம் ஆண்டில் கட்டளை வழங்கியிருந்தது. அந்தக் கட்டளையை மீறி தனியார் சுத்திகரிப்பு நிறுவனங்கள் கல்லுண்டாய் பகுதியில் மலக்கழிவுகளை கொட்டி வந்தன.
இதேவேளை நேற்றைய தினம் மடக்கிப்பிடிக்கப்பட்ட பவுஸரில், அத்தியாவசிய சேவை என்று தமிழிலும் சிங்களத்திலும் எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,26)

# யாழ்.இந்து மாணவர்களுக்கான அதிபரின் அவசர அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப். 27
மாணவர்களின் கற்றலை மேம்படுத்துமுகமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்களால் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களுக்கு பாட ரீதியாக 140 செயலட்டைகள் தயாரிக்கப்பட்டு கல்லூரியின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
மாணவர்கள்தங்கள் வகுப்புக்குரிய செயலட்டைகளைப் பூர்த்தி செய்து பாடசாலை ஆரம்பிக்கும் போது வகுப்பாசிரியர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். செயலட்டைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டு மாணவர் தேர்ச்சி அறிக்கையில் பதியப்படும் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.
இணைய வசதியை அணுக முடியாத மாணவர்களுக்கு வன் பிரதிகளாக தங்களது வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அதனைப் பெற்றுக் கொள்ள தங்களது வகுப்பாசிரியர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
மேலும் யாழ். இந்துவின் மின் வழிக் கற்கை நிகழ்ச்சித் திட்டம் க.பொ.த உயர் தர மாணவர்களுக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# ஆலயத்தில் திருட்டு
## சந்தேகத்தில் 4பேர் கைது

முல்லைத்தீவு, ஏப். 27
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெட்பானவில் அமைந்துள்ள புனித இராயப்பர் தேவாலயத்தில் ஒலிபெருக்கி சாதனங்களை திருடிய சந்தேகத்தில் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
ரெட்பான சந்தியில் உள்ள இராயப்பர் ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் நிர்வாகத்தினர் சென்று பார்வையிட்டபோது அறையில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி சாதனங்கள் இரண்டு (அம்பிளிபயர்) திருடப்பட்டிருந்தது. இதற்கு முன்னரும் ஆலயத்தில் இரண்டு தடவைகள் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது. இந்தத் திருட்டுத் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
பொலிஸார் சந்தேகத்தில் வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து களவாடப்பட்டதாகச் சொல்லப்படும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. (ஒ.5,19)





*வவுனியாவில்*

# காற்றுடன் கூடிய மழை 16 வீடுகளுக்குப் பாதிப்பு

வவுனியா, ஏப். 27
வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மழையுடன் கூடிய கடும் காற்றுக் காரணமாக 16 வீடுகள் பாதிப்படைந்துள்ளன. அவற்றுக்கு இழப்பீடு வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் மாலை பெய்த மழையின் போது வீசிய கடும் காற்றால் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கனகராயன்குளம் பகுதியில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேர் பாதிப்படைந்திருந்தனர். அவர்களுடைய 16 வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு பகுதியளவில் சேதமடைந்திருந்தன. அத்துடன் மரவள்ளி மற்றும் வாழை மரங்களும் பாதிப்படைந்துள்ளன.
அவற்றைப் பார்வையிட்ட மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினர் அவர்களுக்குரிய இழப்பீடுகளை உடனடியாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர். முதல் கட்டமாக 10 ஆயிரம் ரூபாவும் அதன் பின் மதிப்பீட்டின் படி இழப்பீடும் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். (ஒ.5,18,110)

## கலாசார சீரழிவு முறைப்பாடு விசாரணைகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாண நகரில் சந்தேகத்திக்கிடமான முறையில் வீடொன்றில் தங்கி இருந்த பெண்களுடன் தொடர்பில் இருந்த ஆண்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாவலர் வீதியில் உள்ள வீடொன்று அதன் உரிமையாளரால் பிறிதொரு நபருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டது. வாடகைக்கு பெற்ற நபர் அதனை தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிடமாக வாடகைக்கு வழங்கி வந்துள்ளார்.

கடந்த நவம்பர் மாத பகுதியில் பெண்கள் சிலர் தங்கி இருந்த நிலையில் ஆண்கள் பலர் அந்த வீட்டிற்கு வந்து சென்றுள்ளார்கள். அயலவர்கள் விபச்சார நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்று சந்தேகம் கொண்டு கிராம அலுவலருக்கு அறிவித்தனர்.

விடுதி நடத்துனரிடம் கிராம அலுவலர் விசாரணைகளை முன்னேடுத்த போது, தாம் அவ்வாறு செயற்படுவதில்லை என தெரிவித்துள்ளார். இவ்வாறான முறைப்பாடு இனிக் கிடைக்க பெற்றால் அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

அந்த வீடு ஆள்அரவமில்லாது இருந்த நிலையில் சில வாரங்களில் சந்தேகத்திற்கு இடமான ஆண், பெண் நடமாட்டம் காணப்பட்டுள்ளது.

ஊரடங்கு நடைமுறையான காலப்பகுதி தொடக்கம் வீடு யாருமற்ற நிலையில் பூட்டி இருந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் மின் விளக்கு ஒளிர்ந்ததை தொடர்ந்து ஆள் நடமாட்டம் இருந்தமையால், அயலவர்கள் அந்த வீட்டிற்கு சென்ற போது, விடுதி நடத்துனரும் இரு பெண்களும் வீட்டில் இருந்துள்ளனர். அங்கிருந்த பெண்களை அயலவர்கள் விசாரித்த போது, தாம் பருத்தித்துறையை சேர்ந்தவர்கள் என கூறியுள்ளனர்.

அயலவர்கள் பெரிதும் சந்தேகமடையாமல், அன்றைய தினம் அது தொடர்பில் கவனத்தில் எடுக்காமல் விட்டிருந்தனர். மறுநாள் சனிக்கிழமை அந்த வீட்டில் வேறு ஆண்களின் நடமாட்டமும் இருந்துள்ளது. அத்துடன் கார் ஒன்றும் வீட்டிற்கு வந்து சென்றுள்ளது. சந்தேகமடைந்த பொதுமக்கள் பொலிஸாருக்கும், பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் அறிவித்தனர்.

அறிவித்தலின் பிரகாரம் வந்த பொலிஸார் வீட்டை முற்றுகையிட்ட போது அங்கு இரு பெண்களும் விடுதி நடத்துனருமான ஆணும் இருந்துள்ளனர். பெண்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது, தொடர்ந்து முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கினார்கள்.

ஒருவர் பூநகரி பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் மற்றைய பெண் பருத்தித்துறை பகுதியை சேர்ந்தவர் எனவும், அவர்கள் இருவரும் முல்லைத்தீவில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றும் போது நட்பு ஏற்பட்டதாகவும் பொலிஸ் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டது.

அதேவேளை ஒரு பெண் தான் விவாகரத்து பெற்றவர் எனவும் மற்றைய பெண் தனது காதலன் கொழும்பில் உள்ளார். அவருக்காக இந்த விடுதியில் தங்கி இருக்கிறோம் என தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து விடுதியில் இருந்த இரு பெண்களையும் விடுதி நடத்துனரான ஆணையும் அந்த விடுதியில் தனிமைப்படுத்த பொலிஸார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விடுதிக்கு நேற்றுக் காலை சென்ற யாழ்ப்பாண பிரதேச செயலர் ச.சுதர்சன், வீட்டின் உரிமையாளரை அழைத்து வீட்டை விடுதி நடாத்துவதற்கு வழங்கிய ஒப்பந்தத்தை உடனே இரத்து செய்யுமாறும், இனிவரும் காலங்களிலும் விடுதி நடத்தும் நோக்குடன் வீட்டை எவருக்கும் வழங்க கூடாது என அறிவுறுத்தல் வழங்கினார். (ஒ.5,37)

# தந்தை செல்வா மூட்டிய தேசிய எழுச்சி அணையாது!

### நினைவுரையில் சரவணபவன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 27

தமிழ் மக்களின் தனித்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்து, தமிழ்த் தேசிய எழுச்சி எனும் பெருநெருப்பை மூட்டியவர் தந்தை செல்வாவே என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தந்தை செல்வாவின் 43 ஆவது நினைவு தினம் நேற்றாகும். அதனையொட்டி விடுத்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பல தலைவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி மறைந்தனர். தந்தை செல்வாவுக்கு முன்பிருந்த தமிழ்த் தலைவர்கள் இலங்கை என்ற ஒரே தேசத்தில் தமிழர்கள் சிங்களவர்களுக்கு நிகரான அதிகாரம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயே தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

சேர்.பொன்.அருணாசலம், பொன்.இராமநாதன் ஆகியோர் சிங்களத் தலைவர்களுடன் இணைந்து கொழும்பு அதிகாரத்தில் பங்காளிகளாகவே விரும்பினர். அவர்கள் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட போதிலும், அந்தக் கொள்கையைக் கைவிடவில்லை. தமிழ் மக்களின் அடுத்த தலைமையாக உருவாகிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், முழு இலங்கைக்குமான சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்ததேயன்றி தமிழ் மக்களின் தனித்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை.

எனினும் அவர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு சிங்கள, முஸ்லிம் தலைமைகள் ஆதரவு வழங்கவில்லை. அடுத்த தலைமையாக உருவெடுத்த ஜி.ஜி.பொன்னம்பலமும் சம அந்தஸ்து என்ற அடிப்படையில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

சிங்களவர்களுக்கு ஐம்பது வீதமும் ஏனைய தமிழ், முஸ்லிம், பறங்கிய இனங்களுக்கு ஐம்பது வீதமும் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்ற அவரின் கோரிக்கைக்கு முஸ்லிம் தலைமைகளோ அல்லது மலையகத் தலைமைகளோ ஆதரவு வழங்கவில்லை. சிங்களவர்களும் நிராகரித்தனர்.

எனவே, ஒரு நாட்டில் தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ வேண்டுமென முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் சிங்களத் தலைமைகளால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டுவந்த நிலையில், 1952ஆம் ஆண்டில் தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை சமஷ்டிக் கோரிக்கை என முன்வைக்கப்பட்டது.

சமஷ்டி என்பது ஒன்றுக்கும் மேற்பட்ட தனிப் பிராந்தியங்கள் தமது அரசியல் பொருளாதார, கலாசார, மொழி தனித்துவங்களையும் பாதுகாத்துப் பொதுவான விடயங்களில் ஒன்றுபட்டு ஒரு ஒன்றியமாக ஐக்கியப்பட்டுச் செயற்படுவதாகும்.

சமஷ்டிக் கொள்கை மூலம் தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனமென்பதும், அதனால் அவர்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட பாரம்பரிய நிலப்பரப்பு உண்டு என்பதும், வரலாற்றுப் பெருமை கொண்ட ஒரு மொழி உண்டு என்பதும், தனித்துவமான ஒரு கலாசாரம் உண்டு எனவும் சுயமான ஒரு பொருளாதார அடிப்படை உண்டு எனவும் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் மூலம் தனித்துவமான தேசிய இனமான தமிழர்கள் தனித்துவமான தேசிய இனமான சிங்களவர்களுடன் பொது விடயங்களில் ஒன்றுபட்டு வாழ முடியும் என்பதையையே சமஷ்டிக் கொள்கை வலியுறுத்தியது.

எனவே இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாகப் பிரகடனம் செய்ததுடன், இலங்கைத் தமிழ் தேசியத் தனித்துவத்தை அடையாளப்படுத்தியமைக்கான பெருமை தந்தை செல்வாவுக்கே உரியது.

தந்தை செல்வா இந்த சமஷ்டிக் கொள்கையையும், தமிழ் தேசியத்தையும் வெறும் ஏட்டுச்சுரைக்காயாக வைத்திருக்கவில்லை. அவர் நடைமுறையில் தமிழ்த் தேசியத்தை தமிழ் மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதில் பெரும் வெற்றி பெற்றிருந்தார் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றவர்கள் பிறப்பால் கிறிஸ்தவர்கள். ஆனால் அவர்கள் பௌத்தர்களாக மதம் மாறியே சிங்கள இனத்தின் தலைவர்களானார்கள். ஆனால் தந்தை செல்வா கிறிஸ்தவராக இருந்து கொண்டே தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கினார்.

தமிழ் மக்கள் அவரது தலைமையை ஏக மனதாக ஏற்றுக் கொண்டனர். கந்தபுராணக் கலாசாரம் எனக் கூறப்படும் சைவத்துக்கும், தமிழுக்கும் முதன்மை கொடுக்கும் யாழ்ப்பாண மக்கள் ஒரு கிறிஸ்தவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டனர் என்றால் அது சாதி, மத பேதங்களைக் கடந்து தமிழ்த் தேசியத்தின் கீழ் தமிழ் மக்களை அணி திரட்டிய தந்தை செல்வாவின் ஆளுமையே ஆகும்.

அடுத்து வடக்கு மக்களையும், கிழக்கு மக்களையும் தமிழ்த் தேசியத்தின் கீழ் ஒன்றிணைத்து ஒரே தலைமையில் அணி திரட்டிய பெருமை தந்தை செல்வாவுக்கே. அதன் காரணமாக கிழக்கில் இராஜவரோதயம், தங்கத்துரை, சொல்லின் செல்வர் ராஜதுரை போன்ற பல ஒப்பற்ற தலைவர்களை உருவாக்க முடிந்தது.

முஸ்லிம் மக்களைத் தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ள முடிந்த பெருமையும் தந்தை செல்வாவுக்கே உரியதாகும். கிழக்கில் தமிழ் அரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களாக மன்சூர் மௌலானா, எம்.எம்.முஸ்தாபா போன்ற தலைவர்கள் உருவாகினர். முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் மஹ்ரூப் அஷ்ரப் தமிழ் அரசுக் கட்சியில் வளர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக 1957 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களுக்கென மொழி, வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு, தனித்துவமான கலாசாரம், பொதுப் பொருளாதாரம் என்பன உத்தியோகபூர்வமாக இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் தனித்துவமாக தேசிய சிங்களத் தலைமைகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தமிழ் மக்களின் தேசிய உரிமைகளை நிலை நாட்ட நாடாளுமன்றத்துக்கு வெளியே சாத்வீக வழியிலும், நாடாளுமன்றுக்குள்ளும் தந்தை செல்வா வழியில் பல போராட்டங்கள் இடம்பெற்றன. தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டத்துக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆயுதமுனையில் பதிலளிக்கவே ஆயுதப் போராட்டம் வெடித்தது.

1977 இல் தந்தை செல்வாவின் மறைவுடன் தமிழ்த் தேசியத் தலைமையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்ட போதிலும், வெகுவிரைவில் அந்த இடம் தமிழர்களின் விடிவுக்காக ஆயுதமுனையில் போராடக் கிளம்பிய இன்னொரு இளைஞனால் மூன்று தசாப்தங்களுக்கு நிரப்பப்பட்டது.

இன்று அகிம்சை வழியில் தந்தை செல்வா எம்மிடையே இல்லாத போதும், அவர் மூட்டிய தமிழ் தேசிய எழுச்சி என்ற பெருநெருப்பு இன்னும் கொழுந்து விட்டெரியும் என்பது மட்டும் மறக்க முடியாத உண்மையாகும் என்றுள்ளது. (அ)

# ஹெரோய்னுடன் மூவர் கைது

கொழும்பு, ஏப். 27
ஹெரோய்ன் போதைப் பொருள்கள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கணவன், மனைவி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொரட்டுவ - ராவத்தாவத்தை பகுதியில் பொலிஸார் நேற்றுமுன்தினம் நடத்திய சோதனையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து சுமார் 70 கிராம் அளவுள்ள போதைப் பொருள் பைக்கட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 20 வயதுடைய இளைஞர், 42 வயதுடைய கணவன், இவருடைய மனைவி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட போதைப் பொருள் 10 இலட்சம் ரூபா பெறுமதியானது. அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து)



# 80 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.27
மட்டுவில் பகுதியில் 80 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற மதுவரி அலுவலர்கள் சந்தேகநபரைக் கைது செய்தனர். (ஐ-9)

# மர ஆலையில் பரவியது தீ

கொழும்பு, ஏப். 27
பாதுக்க போரேகெதர பகுதியில் மர ஆலையில் திடீர் தீ பரவியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று அதிகாலை பரவிய தீ பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. ஹொரணை நகரசபைக்கு சொந்தமான தீயணைப்பு கருவியை பயன்படுத்தி தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளும் தீயை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.
தீப்பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இதன்போது மர ஆலை பெரிதும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# இலங்கையர்கள் வெளியேற கால அவகாசத்தை நீடிக்கவும்

## ‘குவைத்’திடம் இலங்கை கோரிக்கை

**கொழும்பு, ஏப். 27**
**குவைத்தில், சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்கள் வெளியேறுவதற்கான காலத்தை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கோரப்பட்டுள்ளது.**

வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன, இலங்கைக்கான குவைத் தூதுவர் கலாப் தஹறசிரிகேனிடம் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.
பொது மன்னிப்பின் அடிப்படையில் அங்கிருந்து வெளியேறுவதற்கான காலம் நேற்றுடன் நிறைவடைந்தது.
இதற்கமைய, அது தொடர்பில் தீர்வொன்றை பெற்றுத்தருவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகஇலங்கைக்கான குவைத் தூதுவர், வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவிடம் தெரிவித்ததாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பணியகம் தெரிவித்துள்ளது.
இதேவேளை, குவைத்தில் தங்கியுள்ள இலங்கை பணியாளர்களுக்கு உணவு மற்றும் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், உதவிகள் தேவைப்படுவோர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு அறியத்தருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (து)

## கொரோனா தொற்றால் ஏற்பட்டுள்ள

# பொருளாதார பாதிப்புகளை குறைக்க 6 பீடாதிபதிகள் சில முன்மொழிவுகள்

கொழும்பு, ஏப். 27
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்காக ஆறு பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீட பீடாதிபதிகள் சில முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விஷேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க மற்றும் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரிடம் கடந்த 5 ஆம் திகதி இந்த தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டுள என்று தெரிவிக்கப்பட்டது.
களனி மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஜனக டி சில்வா, ருஹுணு மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சரத் லேகம்வசம், பேராதனை மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஏ.எம்.குலரத்ன, ரஜரட்ட மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சிசிர சிறிபத்தன, கொழும்பு மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க,ரீ ஜயவர்தனபுர மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கமணி வனிகசூரிய ஆகியோர் இந்தத் தீர்மானங்களை முன்வைத்துள்ளனர்.
அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:
அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பாராட்டியுள்ள பேராசிரியர்கள், வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குவரும் நோய்த் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கு சுகாதாரத் தரப்பினரும் பாதுகாப்புத் தரப்பினரும் எடுத்துள்ள நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன.
எனினும், தற்போதைய நிலைமை மக்களுக்கும் தொழிற்றுறைகளுக்கும் பாதிப்பாக அமைந்துள்ளன. இலங்கை இந்த நிலையில் இருந்து விடுபடவேண்டும்.
பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன், நாட்டின் சனத்தொகையில் 10 வீதமாக உள்ள 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சைபெறுவதிலும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.
இந்த குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையிலும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.
பொருளாதாரத்துறையை நோக்குமிடத்து, ஆடை உற்பத்தி தொழிற்துறைக்கு மாத்திரம் இரண்டு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. கூலித்தொழில் செய்வோரும் நிர்க்கதியாகியுள்ளனர்.
பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக சமூகத்தில் ஒருவித அச்சம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனால் வதந்திகள் பல பரவியுள்ளன.
இத்தகைய வதந்திகள் காரணமாக காய்ச்சல், இருமல் போன்ற நோய் அறிகுறியுள்ள நோயாளர்களுக்கேனும் சிகிச்சையளிக்க சுகாதாரத் தரப்பினர் அஞ்சுகின்றனர்.
நோய் பரவும் தன்மை குறைந்திருந்தால், கட்டம் கட்டமாக ஒவ்வொரு மாவட்டமாக ஊரடங்கைத் தளர்த்த முடியும் என்ற தீர்மானத்தை 6 பேராசிரியர்களும் முன்வைத்துள்ளனர்.
அதிகளவிலான நோய் தொற்றாளர்கள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற பகுதிகளை தனிமைப்படுத்த முடியும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
மருத்துவமனைகள், பல்பொருள் அங்காடிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களை குறிப்பிட்ட நேரத்துக்கு திறந்து வைக்குமாறு பிரேரித்துள்ள பேராசிரியர்கள், அனைத்து வீடுகளுக்கும் இந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப்பத்திர நடைமுறையொன்று தொடர்பிலும் ஆலோசனை வழங்கியுள்ளனர்.
இதேவேளை, நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய அசௌகரியத்தை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்கூட்டியே எடுக்கப்பட வேண்டும்.
சமூக ஊடகங்கள் மற்றும் முக்கிய ஊடங்கள் சில ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலான தகவல்களை பரப்புவதால் சிலர் நோய் அறிகுறிகளை மறைப்பதற்கு முயற்சிக்கும் அபாயம் உள்ளதாகவும் மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகள் கடிதத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (து)

# மோதியது “பைக்” இறந்தது குழந்தை

## மெதிரிகிரியவில் பரிதாபம்

கொழும்பு, ஏப். 27
மெதிரிகிரிய மெதகம்புர பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 2 வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பெற்றோர் குழந்தையை அழைத்துக்கொண்டு நீராடச்சென்ற வேளையில் வீதி வழியே வந்த உந்துருளி மோதி விபத்து இடம்பெற்றது. அதில் குழந்தை இறந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (து)



# திருமலை நீதிமன்ற வழக்குத் திகதிகள்

## மாற்றம் என தெரிவிப்பு

திருகோணமலை, ஏப்.27
திருகோணமலை முதலாம் இலக்க நீதிமன்றில் 2020.03.16 ஆம் திகதியிலிருந்து 24.04.2020 ஆம் திகதி வரை நியமிக்கப்பட்ட வழக்குகள் அனைத்தும் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நடத்தப்படும் என்று திருகோணமலை நீதிமன்று அறிவித்துள்ளது.
இதனடிப்படையில், 2020 மார்ச் மாதம் 16ஆம் திகதி இடப்பட்ட வழக்குகள், ஜூன் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளன. மற்றைய திகதிகளும் நீதிமன்ற விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வழக்காளிகள் குறிப்பிட்ட திகதிகளில் வழக்குகளில் முற்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (து-114)

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 12 . 1939

மறைவு 26 . 04 . 2020

## அருட்தந்தை மார்சேல் மரியதாஸ் இராஜநாயகம்

**(பதுளை மறைமாவட்ட குருமுதல்வர்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பதுளை மறைமாவட்ட குருமுதல்வருமாகிய அருட்தந்தை M.M. இராஜநாயகம் நேற்று (26.04.2020) ஞாயிற்றுக்கிழமை பதுளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்சேல் பிலோமினா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான றுக்மணி, பூமணி, அரசநாயகம், செல்வநாயகம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, செபரட்ணம் மற்றும் ராணி ஒலிவற் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.04.2020) பிற்பகல் 3.00 மணிக்கு பதுளை மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இரங்கத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பதுளை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில்.
தொடர்பு இல:077 844 6092

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 12 . 1950

மறைவு 25 . 04 . 2020

## இரத்தினம் சிவலிங்கம்

**(இரட்னா மோட்டோர்ஸ்-உரிமையாளர்)**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவலிங்கம் கடந்த (25.04.2020) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், கவிதா, பிருந்தா, ஜீவனா, மனோஜிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தினேஸ்குமரன், தர்மசீலன், விஸ்ணுவர்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யக்சாயி, சாயிஷா, நவியா, நிவியா, சகானா, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சபாரத்தினம் மற்றும் பாக்கியலட்சுமி, புஸ்பவதி, சரஸ்வதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஆனந்தமூர்த்தி, சச்சிதானந்தன், சண்முகராஜா காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2020) திங்கட்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இரத்தினம் அவனியு,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# வவுனியாவில் சிறைச்சாலை பணியாளருக்கும் சோதனை

வவுனியா, ஏப். 27


வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் பணியாற்றும் திருகோணமலையைச் சேர்ந்த பணியாளரிடமிருந்து கொரோனா சோதனைக்கான மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களாக காய்ச்சல் அவருக்கு ஏற்பட்டுள்ளது. வவுனியா மருத்துவமனையில் நேற்று மாலை அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மருத்துவர்கள் அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினாரா என்பதனைக் கண்டறிவதற்காக மாதிரிகளை பெற்று அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

(ஒ.5,110)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 28 . 01 . 1931

மறைவு 21 . 04 . 2020


## வேலாயுதர் கதிர்காமு

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் பாடசாலையின் நலன் விரும்பியுமான அமரர் வே.கதிர்காமு அவர்கள் 1970 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை பழைய மாணவனாக பெற்றாராக, பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக பல்வேறு பழநிலைகளில் பல அதிபர்களின் கீழ் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்.

அன்னாரின் மறைவு பாடசாலைச் சமூகத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இச்சந்தர்ப்பத்தில் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முன்னாள் அதிபர்கள்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 ... 08 ... 1950

மறைவு 26 ... 04 ... 2020

## துரைச்சாமி சையோகநாதன்

**(உரிமையாளர்-
வில்லையடி நாகபூசணி அம்பாள் கச்சான் பிஸ்கட் தயாரிப்பாளர்)**

மண்டதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 76/5, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி சையோகநாதன் நேற்று (26.04.2020) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளன துரைச்சாமி சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா தவமணி தம்பதியரின் மருமகனும், மங்கையகரசியின் அன்புக் கணவரும், பிரதீபராஜ் (லண்டன்), பிரஷிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகப்பிரியா (லண்டன்), ஜகமுகன் ஆகியோரின் மாமனாரும், அனகா (லண்டன்), சுவஸ்திகன், தணிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் சந்திரபாலன் (பிரான்ஸ்), சிவலோகராஜா (அப்பி-கனடா) ஆகியோரின் சகோதரனும், நாகராஜா, காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் மகேஸ்வரிலீலா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

76/5, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
077 312 6909

தகவல்:
குடும்பத்தினர்.

# இரு கட்டங்களாக பொதுத் தேர்தல்?

**கொழும்பு, ஏப்.27**
**ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளபோதிலும், தேவை ஏற்பட்டால் நாடாளுமன்றத் தேர்தலை இரண்டு கட்டங்களாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது என்று ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.**

மே மாதம் 4ஆம் திகதி வேட்பாளர்களுக்கு இலக்கங்கள் வழங்குவதற்கும் தபால் வாக்கு விண்ணப்பங்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய அவர் மே மாதம் மூன்றாம் திகதி நிலைமையைப் பார்த்தே வாக்கெடுப்பு முறையைத் தெரிவு செய்வோம் என்றார். இந்தத் தேர்தலை நடத்துவதற்கு 700 கோடி ரூபா தேவைப்படும் என்று ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதும், தற்போதைய நிலையின் கீழ் சுகாதார அமைச்சு வழங்குகின்ற ஆலோசனைகளைப் பின்பற்றித் தேர்தலை நடத்துவதாக இருந்தால் மேலும் செலவு அதிகரிக்கும் என்று சமன் சிறி ரத்நாயக்க கூறினார். (எ)

*யாழ். பல்கலைக்கழக*

# வெளிமாவட்ட மாணவரின் செலவை ஏற்றார் தியாகி



யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளிமாவட்ட மாணவர்களின் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்கின்றேன் என்று தியாகி அறக்கொடை நிலைய நிறுவுநர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளார்.
கொரோனா தொற்றால் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் தங்கள் இடங்களுக்குப் போக முடியாமல் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர். அதனால் வெளிமாவட்ட மாணவர்களின் உணவுத் தேவையையும் அவர்கள் தமது இடங்களுக்குச் செல்வதற்கான செலவுகளையும் தான் ஏற்றுள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.
இவர் கொரோனா நிதியத்துக்காக கடந்த மாதம் ஒரு கோடி ரூபா வழங்கியிருந்தார். ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களையும் வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-20)

# கைப்பணி போட்டிகள்

வடமாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன், சர்வதேச ரீதியில் ஏற்றுமதி செய்யும் நிறுவனமான 'கிறாவ்றறி' நிறுவனம் நடத்தும் மாணவர்களுக்கான இடர்கால கைப்பணி போட்டிகள் இடம்பெறவுள்ளன.
இப் போட்டியின் விதிமுறைகளாக புத்தாக்கம் மற்றும் கலாசாரம் சார்ந்த ஆக்கங்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆக்கங்கள் இயற்கை சார்ந்தவையாக அமைதல் வேண்டும் (வானிஸ் மட்டும் பயன்படுத்த முடியும் வர்ண பூச்சுக்கள் பயன்படுத்த முடியாது) சிரட்டை, மரம், மூங்கில், கடல்சார் கழிவுப் பொருட்கள் மரப்பட்டைகள், வேர்கள் வாழைநார், கமுகு மடல்கள், என்பவற்றிற்கும் முன்னுரிமை வழங்கப்படும் ஏனைய கழிவுப் பொருள் ஆக்கங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
மாணவர்கள் தங்கள் சுயமான சிந்தனைகளுக்கு அமைவாக ஆக்கங்களைச் செய்தல் வேண்டும். ஒருவர் மூன்று ஆக்கங்களை பதிவு செய்யலாம் நடுவர்களின் தீர்மானமே இறுதியானது.
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை இயல்பு நிலைக்கு திரும்பியதும் ஒரு வாரத்திற்குள் ஆக்கங்கள் சேகரிக்கப்படும்.
பங்குபற்றுபவர்கள் 5.5.2020 ஆம் திகதிக்குள் இந்த போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் மே 5ஆம் திகதிக்கு முன் தமது விபரங்களை 0773842191 என்ற வைபர், வட்சப் இலக்கத்துடன் அல்லது 0212232500 என்ற அலுவலக இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றி பெறுவர்களுக்கு முதலாம் பரிசு 20 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசு 10 ஆயிரம் ரூபாவும் மற்றும் 10 ஆறுதல் பரிசுகளும் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும். என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-169)

## மக்களைச் சந்திக்க அனுமதி தேவையெனில் ஜனநாயக விரோத தேர்தல் தேவையில்லை

*முன்னாள் எம்.பி. சிவமோகன் காட்டம்*

வவுனியா, ஏப்.27
பொலிஸ் இராணுவத்திடம் அனுமதி பெற்றுத்தான் வேட்பாளர்கள் கிரமங்களுக்கு செல்ல வேண்டும் என்றால் அப்படி ஒரு ஜனநாயக விரோத தேர்தல் தேவை இல்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
சில நாள்களுக்கு முன் ஒரு வேட்பாளர் தேர்தல் ஆணையாளருக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில் ஊரடங்கு நேரத்திலும் மக்களைச் சந்திப்பதற்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறு கோரியிருந்தார் அதற்கு தேர்தல் ஆணையாளர் அனைத்து வேட்பாளர்களும் பொலிஸ் இராணுவத்தை அனுகி தாங்கள் மக்களை சந்திப்பதற்கு கிரமத்திற்கு செல்வதற்கான ஊரடங்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரியிருந்தார். எனவே பொலிஸ் இராணுவ அனுமதி பெற்றுத் தான் வேட்பாளர்கள் கிராமத்திற்கு செல்ல வேண்டும் என்றால் அப்படி ஒரு ஜனநாயக விரோத தேர்தல் தேவையில்லை. இராணுவ பொலிஸ் அடக்குமுறையை வைத்துக் கொண்டு நீதிக்குப் புறம்பான தேர்தலை நடத்த முற்படுகிறதா இந்தத் தேர்தல் ஆணையகம் என்னும் சந்தேகம் எழுகிறது.
எனவே அனைத்து ஜனநாயகக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய முன்வர வேண்டும் அதுவே இன்றைய தேவை கொரோனா அச்சத்தில் மக்கள் அல்லலுற்றுக் கொண்டு இருக்கும் போது அதற்கு இடையில் தங்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு முற்பட்டு நிற்கின்றது அரசு. அதற்கு ஆதரவாக பிக்குகள் அணியினரும் திரண்டிருப்பது ஜனநாய செயற்பாடுகளுக்கு சாவுமணி அடித்தாற் போல் உள்ளது.
ஒட்டு மொத்தத்தில் அராஜக ஆட்சிக்குள் நாடு சிக்கியிருக்கும் இந்த நிலையில் எதிர்க் கட்சியில் இருக்கும் இந்தச் சிங்கள தேசிய கட்சிகள் அமைதி காப்பது பாரிய சந்தேகங்களை எழுப்பி வருகின்றது.
எனவே தேர்தல் ஆணையாளரின் ஜனநாயக மீறல்களுக்கு எதிராகவும் இந்த அரசின் ஜனநாயக மீறல்களுக்கு எதிராகவும் உடனடியாக நீதிமன்றத்தை நாடி உண்மையான நீதியைப் பெற்றுக் கொள்ள அனைத்துக் கட்சிகளும் முயற்சிக்க வேண்டும் - என்றார். (ப)

# உப்பு உற்பத்தி செய்கைக்கான வழிவகைகளை விரிவுபடுத்துக

*உற்பத்தியாளர்கள் எடுத்துரைப்பு!*

திருகோணமலை, ஏப்.27
உப்பு உற்பத்தி, மற்றும், சந்தைப்படுத்தல்களுக்கு வசதிகளை ஏற்படுத்துமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் வில்வெளி, கச்சக்கொடித்தீவு போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு உற்பத்திச் செய்கையில் ஈடுபடுபவர்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைவாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால், உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்கவில்லை. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு ஆயிரத்து 800 ரூபா அளவில் விற்பனை செய்யப்பட்டு வந்த உப்பு சென்ற வருடம் 250 ரூபாவாகவே விலை குறைக்கப்பட்டது. உப்பு உற்பத்தியாளர்களில் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடிய தொழில் நுட்ப உத்திகள் போதுமான பயிற்சிகள் இங்கு காணப்படவில்லை. இதனால் உப்பு உற்பத்தியை நம்பி வாழும் பல குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்றன. தற்போது பதப்படுத்தப்பட்டு செய்கைக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. உப்பு நிலப்பகுதிக்குள் இருக்கும் உள்வீதிகள் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளன. இதனால் உற்பத்தி செய்கையின் பிற்பாடு கொள்வனவுக்கு உகந்த வகையில் ஏற்றுமதி செய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. மாரி மழை காலங்களில் நன்னீர் கலப்பு உற்பத்திக்கு பெரும் சவாலாகவே உள்ளது. ஒட்டு மொத்தமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிக்கும் இவ்வாறான உப்பளங்களை விருத்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும்





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2020இல் வெளியிடப்பெற்றது.